தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மிளகாய் பயிர்க்கான விலை முன்னறிவிப்பு

மிளகாய் உற்பத்தியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசம் போன்றநாடுகள் முன்னனி வகுக்கின்றன. நமது நாட்டில் 2015-16 ஆம் ஆண்டில், பயிரிடப்படும் நறுமணப் பயிர்களில், மிளகாய் பங்களிப்பு 29 சதவிகிதமாகவும் அதாவது 7.69 லட்சம் எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு அதன் உற்பத்தி 16.28 லட்சம் டன்களாக உள்ளன. இந்தியாவில், ஆந்திரபிரதேசம் 49 சதவீதம், கர்நாடகா 18 சதவீதம், மகாராஷ்டிரா 6 சதவீதம் மற்றும் தமிழ்நாடு 3 சதவீதம் மிளகாய் பயிரிடப்படும முக்கிய மாநிலங்களாகும். தமிழகத்தில் 2015-16 ஆம் ஆண்டில் மிளகாய் சாகுபடி தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிகமாகவும் மற்ற மாவட்டங்களில் குறைவாகவும் பயிரிடப்பட்டுள்ளது. முண்டு மற்றும் சன்னம் இரகம் தமிழகத்தில் அதிகளவில் பயிரிடப்படுகின்றன, விதைப்பு பொதுவாக அக்டோபர் மாதத்தில் நடைபெறும்.

மற்ற நாடுகளை ஒப்பிடுகையில் மிளகாய் நுகர்வு இந்தியாவில் அதிகமாக உள்ளது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மிளகாயில் 80 சதவிகிதம் இந்திய நுகர்வோரே உட்கொள்ளுகின்றனர். மிளகாயில் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் அதிகமாக காணப்படுகின்றன. இந்தியா, 2015-16 ஆம் ஆண்டு 3.47 லட்சம் டன் மிளகாவை காய்ந்த மிளகாய், மிளகாய்த் தூள் போன்ற வடிவில் அமெரிக்கா, இலங்கை மற்றும் வங்காளம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

தமிழகத்தில் இந்த ஆண்டு மழை குறைந்துள்ளதால் மிளகாய் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது. அதேசமயம் ஆந்திராவில் சராசரியை விட 28 சதவிகிதம் மிளகாயின் சாகுபடி அதிகரித்துள்ளது எனவே தமிழகத்தில் மிளகாய் உற்பத்தி குறைந்தாலும், ஆந்திராவிலிருந்து

வரும் வரத்து அதனை ஈடு செய்யும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. வடகிழக்கு பருவமழை தொடங்கிய பின் மிளகாய் சாகுபடி தமிழகத்தில் அதிகரிக்கும் எனவும் கணிக்கப்படுகின்றன.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், விலை முன்னறிவிப்பு திட்டம், சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. இதன் அடிப்படையில், கடந்த 15 ஆண்டுகளாக திருநெல்வேலி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவி வரும் சம்பா வகை மிளகாய் வற்றல் விலையை ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், சம்பா வகை மிளகாய் வற்றல் திருநெல்வேலி சந்தையில் அறுவடை காலத்தில் ஒரு கிலோவிற்கு ரூ.100-110 வரை இருக்கும் என கணிக்கப்படுகின்றது. எனவே விவசாயிகள் தக்க விதைப்ப ,முடிவுகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641003.
தொலைபேசி – 0422-2431405

<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனைமற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641003.
தொலைபேசி– 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்